# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.394/2025 | Date | : 03.06.2026 |
| Deposition of Witness for | : அ.சா.4 | Taluk | : |
| Name | : மயில்கணேசன் | Calling | : சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| Father / Husband Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.06.2026

**(எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை, மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

1) நான் தற்போது மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி காவல் நிலையத்தில் பணி புரிந்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.மணி பணியிடம் மாற்றம் பெற்று சென்றுவிட்டதால், அவர்களுடைய கையொப்பம் எனக்கு பரிட்சையம் என்பதாலும், வழக்கின் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 11.08.2025ம் தேதி காலை 11.00 மணிக்கு காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.K.S.மணி நிலைய அலுவலில் இருந்த போது, முன்னதாக 08.08.2025ம் தேதியன்று சேலம் அரசு

மருத்துவமனையில் இருந்து கலா மற்றும் பவித்ரா ஆகியோரின் அடிதடி காயதகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு தலைமை காவலர் திரு.செந்தில்குமார் என்பவரை அனுப்பி சிகிச்சையில் இருந்த அ.சா.1–யிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்றுவந்ததன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்ததில் குற்ற எண். 310/2025 ஆக சட்டபிரிவுகள் 296(b), 324(4), 115(2), 118(1), 351(3) BNS ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். பின்னர் முதல் தகவல் அறிக்கையை வாதியின் புகார் வாக்குமூலத்துடன் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.2, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். **(மேற்சொன்ன புகார் அ.சா.ஆ.5 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**)

3) பின்னர் அன்றைய தினமே பகல் 12.00 மணிக்கு சம்பவ இடமான அ.சா.1–ன் வீட்டிற்கு சென்று ரமேஷ், சத்யா ஆகிய சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் கண்ணுற்ற சாட்சிகள் பவித்ரா, தேவி ஆகியோரைத் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்சொன்ன பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4) இவ்வழக்கில் காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த சேலம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.அருண் என்பவரை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றினை பெற்றுள்ளார். மேற்படி சான்றில் சிகிச்சைக்கு ஒத்துழைப்பு தரவில்லை என்பதால் எந்த கருத்தும் கூற இயலாது என சான்று அளித்துளளார். இது தொடர்பாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்சொன்ன விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று**

**அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5) மேற்படி விசாரணையில் எதிரி அ.சா.1 மற்றும் 2–யை கொலைமிரட்டல் செய்யவில்லை என்று தெரியவந்ததாலும், அ.சா.2 முறையாக எந்த மருத்துவமனையிலும் சிகிச்சைக்கு அட்மிட் ஆகவில்லை என்பதாலும் வழக்கின் சட்டப்பிரிவுகள் 296(b), 324(4), 115(2), 118(1), 351(1) BNS லிருந்து 296(b), 115(2), 131 BNS ஆக மாற்றம் செய்து எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். **(மேற்சொன்ன சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5) எதிரியை கடந்த 25.08.2025ம் தேதி 01.00 மணிக்கு கைது செய்து நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இத்துடன் விசாரணையை முடித்து எதிரி மீது கடந்த 10.09.2025ம் தேதி, சட்டப்பிரிவுகள் 296(b), 115(2), 131 BNS–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

மேற்படி வழக்கில் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், பொய் புகார் பெற்று சரிவர புலன் விசாரணை செய்யாமல் இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

Witness

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

**Sd/- D.Sivakumar**
Judicial Magistrate No.II,
Sankari.